ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது

අංක 1813/7 - 2013 ජුනි මස 04 වැනි අඟහරුවාදා - 2013.06.04
*1813/7 ஆம் இலக்கம் - 2013 ஆம் ஆண்டு யூன் மாதம் 04 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி IV (ஆ) - உள்ளூராட்சி

## உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள்

**புத்தளம் பிரதேச சபையின் தவிசாளர் பதவியிலான வெற்றிடத்தை நிரப்புதல்**

இறப்பெய்தியமை காரணமாக புத்தளம் பிரதேச சபையின் தவிசாளரின் பதவி வெற்றிடமாகியுள்ளதாதலாலும்;

ரன்கிரி பத்திரகே திலுக் சுசிர பத்திரகே எனும் தவிசாளர் அங்கம் வகிக்கின்ற ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி என்ற அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியின் செயலாளர் முப்பது (30) நாட்கள் காலப்பகுதிக்குள் தவிசாளராக தேர்ந்தெடுக்கப்பட்டவரென வெளிப்படுத்தப்பட வேண்டியவரும் அக்கட்சியைச் சேர்ந்தவருமான புத்தளம் பிரதேச சபையின் உறுப்பினர் தொடர்பாக தீர்மானிக்குமாறு என்னால் பணிக்கப்பட்டுள்ளாராதலாலும் ;

மேலே கூறப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியின் செயலாளர், அத்தகைய வெற்றிடத்தை நிரப்புவதற்கு திரு. பமுனு ஆரச்சிகே நிமல் பமுனுஆரச்சி என்பவரை பெயர் குறித்து நியமிக்கும் தமது முடிவினை அறிவித்துள்ளாராதலாலும் ;

இப்போது புத்தளம் பிரதேச சபையின் தெரிவத்தாட்சி அலுவலர் கஹந்தவ ஆரச்சிகே சுமித் சந்தன ஆகிய நான், திரு. பமுனு ஆரச்சிகே நிமல் பமுனுஆரச்சி என்பவர், புத்தளம் பிரதேச சபையின் தவிசாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளதாக இத்தால் வெளிப்படுத்துகின்றேன்.

கே. ஏ. சுமித் சந்தன,
தெரிவத்தாட்சி அலுவலர்,
புத்தளம் பிரதேச சபை.

தேர்தல்கள் அலுவலகம்,
புத்தளம்,
*2013, மே 28.*

*6 - 407/1*

**புத்தளம் பிரதேச சபையின் உறுப்பினரொருவரின் பதவியிலான வெற்றிடத்தை நிரப்புதல்**

இறப்பெய்தியமை காரணமாக புத்தளம் பிரதேச சபையின் உறுப்பினரொருவரின் பதவி, வெற்றிடமாகியிருக்கின்றதாதலாலும் ;

ரன்கிரி பத்திரகே திலுக் சுசிர பத்திரகே எனும் உறுப்பினர் சேர்ந்திருந்த அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியான ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் செயலாளர், முப்பது (30) நாட்கள் காலப்பகுதிக்குள் உறுப்பினரொருவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு வெளிப்படுத்தப்பட வேண்டிய அக்கட்சியைச் சேர்ந்தவரும், புத்தளம் பிரதேச சபையின் உறுப்பினரொருவராகத் தேர்ந்தெடுக்கப்படுவதற்கு தகுதியுடையவருமான ஆளொருவரைப் பெயர் குறிப்பதற்கு என்னால் பணிக்கப்பட்டுள்ளாராதலாலும் ;

மேலே கூறப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியின் செயலாளரினால் அத்தகைய வெற்றிடத்தை நிரப்புவதற்கு தகுதியுள்ள ஆளொருவராக திரு. ஆரச்சிலாகே சுபசிங்க சுரத் இசுரு சமிந்த என்பவரைப் பெயர் குறித்து நியமித்துள்ளார் ஆதலாலும் ;

இப்போது புத்தளம் பிரதேச சபையின் தெரிவத்தாட்சி அலுவலர் கஹந்தவ ஆரச்சிகே சுமித் சந்தன ஆகிய நான், திரு. ஆரச்சிலாகே சுபசிங்க சுரத் இசுரு சமிந்த என்பவர், புத்தளம் பிரதேச சபையின் உறுப்பினரொருவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளதாக இத்தால் வெளிப்படுத்துகின்றேன்.

கே. ஏ. சுமித் சந்தன,
தெரிவத்தாட்சி அலுவலர்,
புத்தளம் பிரதேச சபை.

தேர்தல்கள் அலுவலகம்,
புத்தளம்,
*2013, மே 28.*

*6 - 407/2*